REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: தை 30உ சனி (12—2—55) ★ ★ வெளியூர்: மாசி 1உ ஞாயிறு (13—2—55) [இதழ் 207

4,000 போலீசார் வேலையிலிருந்து நீக்கப்படுவார்களாம்!

லாகூர், பிப். 12—

பாகிஸ்தான் பஞ்சாபில் 4,000 போலீசாரை வேலையிலிருந்து நீக்க இருக்கிறார்கள். செலவுகளைக் குறைக்க சர்க்கார் எடுக்கும் நடவடிக்கைகளில் இதுவும் ஒன்றாகும்.

ஏற்கனவே 300 போலீசார் ஆட்குறைப்பின் மூலம் வேலையிலிருந்து நீக்கப்பட்டுவிட்டனர். இந்த வார இறுதிக்குள் மேலும் 700 பேர் வேலையிலிருந்து நீக்கப்படுவார்கள் என்று தெரிகிறது.

சிக்கன முறையைக் கையாள மற்ற இலாகாக்களிலும் பாகிஸ்தான் பஞ்சாப் சர்க்கார் ஆட் குறைப்பு செய்ய இருக்கின்றனர் என்று தெரிகிறது.

பி. சோ. கட்சியின் இட்லர் ஆட்சி!

இழிவை நீக்கிய நல்விருந்து!

சூரத்திற்கு அருகே உள்ள வான்ஸ் என்னும் கிராமத்தில் நடைபெற்ற திருமண விருந்தில் கிராம மக்கள் அனைவரும் கலந்துகொண்டனர்.

அரிசனங்கள் உணவு பரிமாற உயர் ஜாதியினர் எனப்படுவோர் விருந்துண்டார்களாம். பொதுக் கிணறுகளில் அரிசனங்கள் தண்ணீர் எடுத்தார்களாம்.

உயர் ஜாதியைச் சேர்ந்த காங்கிரஸ் ஊழியரான கூவர்ஜி மேத்தா என்ற இளைஞருக்குத் திருமணம் நடைபெற்றபோதுதான் இந்த பொது சமூக விருந்து நடைபெற்றது.

மாப்பிள்ளையே நேரில் சென்று கிராமத்து மக்கள் அனைவரையும் விருந்தில் கலந்துகொள்ளுமாறு அழைத்தாராம்!

அன்று கிராமம் பூராவும் நன்கு அலங்கரிக்கப்பட்டு சுத்தம் செய்யப்பட்டிருந்ததாம்.

"உருப்படியான பலன் கிடைக்கக்கூடிய தருணத்தில் ரஷ்யா உள்பட 4 வல்லரசுகள் மாநாட்டை நடத்துவதுதான் பிரிட்டனின் கொள்கையாக இருக்கும்," என்று, பிரிட்டன் பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில், 'காமன்ஸ்' சபையில் மீண்டும் கூறியிருக்கிறார்.

மரத்தில் இருந்த மனிதனை குருவியை போல் சுட்டனர்

சட்ட சபையில் குஞ்சன் நாடார் எம்.எல்.ஏ. குற்றச்சாட்டு

ஆறு வயது சிறுவன் தாக்கப்பட்ட வெறிச் செயல்

ஆண்களையும் பெண்களையும் ஒரே லாக்கப்பில் அடைத்தனராம்!

"நான் மோதிரம் திருடியதாகக் குற்றஞ் சாட்டப்பட்டேன்"

திருவனந்தபுரம், பிப். 12—

"ஆண்களும் பெண்களும் போலீசாரால் ஒரே லாக்கப்பில் அடைக்கப்பட்டார்கள்."

"போலீசாரின் வதையினால் 24 வயதுடைய மாணவர் ஒருவர் விடுதலையான மூன்றாம் நாள் மாண்டுபோனார்."

"போலீஸ் இன்ஸ்பெக்டர் ஒருவருடைய குளிக்கும் அறையிலிருந்து மோதிரம் ஒன்றைத் திருடியதாக நான் குற்றம் சாட்டப்பட்டேன்; இக்குற்றச் சாட்டை நிரூபிக்கப் போலீசார் இதற்கு சாட்சிகளைக் கொண்டுவந்தனர். லாக்கப்பில் இருக்கும்போது நான் அடிக்கப்பட்டேன்."

"இதையெல்லாம் நான் எனது லட்சியத்திற்காகப் பொறுத்துக் கொள்வேன்; ஆனால், மரத்தின் மீது உட்கார்ந்திருந்த மனிதர் ஒருவரை, குருவியைச் சுடுவதுபோல் போலீசார் துப்பாக்கியால் சுட்டுக் கீழே தள்ளினர்."

—என்று திரு—கொச்சி சட்டசபையில் ஜாமீனில் அண்மையில் விடுவிக்கப்பட்ட தி. த. நா. கா-வைச் சார்ந்த எம்.எல்.ஏ.-வான குஞ்சன் நாடார், பட்டம் தாணு பிள்ளையின் அடக்குமுறை பற்றி சட்டசபையில் பேசுகையில் எடுத்துக்காட்டினார்.

"பட்டம் தாணுவின் ஆட்சியில், இட்லரின் ஆட்சி காலத்தில் காணப்படாததும், அதைவிட மோசமானதுமான இராணுவ ஆட்சி திருவாங்கூர் — கொச்சியில் நடைபெற்றது"

என்று, அவர் மேலும் குற்றம் சாட்டினார். தொடர்ந்து அவர் சொன்னார்:—

"தமிழருக்கு உரித்தான பகுதிகள் சென்னையுடன் சேர வேண்டுமென்ற கிளர்ச்சி நடைபெற்றபோது ஏராளமான மாணவர்கள் போலீசாரால் தாக்கப்பட்டனர்; இப்போது அந்த மாணவர்கள் முறிந்த கால்களுடன், ஒடிக்கப்பட்டகரங்களுடனும் வாழ்கிறார்கள்;

"ஆகஸ்டு 11-ந் தேதியன்று துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்ற பின்னர், குழித்துறை சிறைக்குக் கொண்டுவரப்பட்ட பிணங்களில், ஒருவருடைய உடல் குற்றுயிராக இருந்தது; சரியான நேரத்தில் மருத்துவ உதவி அளிக்கப்பட்டிருந்தால் அவருடைய உயிரைக்காப்பாற்றி இருக்கலாம்.

"ஆறு வயதுடைய குழந்தை ஒன்றை போலீசார் கையப்

(4-ம் பக்கம் பார்க்க)

பாகிஸ்தானில் இராணுவ— சர்வாதிகார ஆட்சி ஏற்படுமா?

நீதி மன்றத் தீர்ப்பின் எதிரொலி!

கராச்சி, பிப். 12—

பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபையை, பாகிஸ்தான் கவர்னர்-ஜெனரல் கலைத்தது சட்டவிரோதமானது என்று சிந்து உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்ததையொட்டி பாகிஸ்தானின் அரசியல் வாழ்வில் பெருத்த மாறுதல்கள் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பாகிஸ்தான் பெடரல் நீதிமன்றம் உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பை ஒப்புக்கொள்ளுமென்றால், பாகிஸ்தானில் இராணுவ ஆட்சி ஏற்படும் என்று பலர் கருதுகிறார்கள்.

கலைக்கப்பட்ட அரசியல் நிர்ணய சபை மீண்டும் பணியாற்ற வேண்டுமென்பதை பாகிஸ்தான் மக்கள் பலர் விரும்பவில்லையாம்.

இராணுவத்தின் ஆதரவுடன் கவர்னர்-ஜெனரலின் சர்வாதிகார ஆட்சி பாகிஸ்தானில் ஏற்படலாம் என்பதைப் பலர் மறுக்கவில்லையாம்.

பாகிஸ்தான் கவர்னர்-ஜெனரலும், பிரதம மந்திரியும் இப்போது வெளிநாடுகளில் இருக்கின்றனர்; ஆகவே, நீதிமன்றத்தின் தீர்ப்பு பற்றிய அதிகார பூர்வமான கருத்து தெரியவில்லை.

திறமையே திறமை!

இந்திய இரயில்வேக்களில் இரயில் வண்டிகளிலிருந்து ஆண்டொன்றிற்குச் சராசரியாக சுமார் ரூ. 50 லட்சம் மதிப்புள்ள சாமான்கள் களவு போகின்றனவாம்!

இந்திய இரயில்வே கோச்சு வண்டிகளில் பொருத்தப்பட்ட சாமான்கள் அடியோடு களவாடப்பட்டுவிடுகின்றன என்று இரயில்வே போர்டார் குறிப்பிட்டிருக்கின்றனராம்.

6-சுப்ரீம்கோர்ட் நீதிபதிகள் விலக்கப்பட்டனர்

ரஷ்ய பார்லிமெண்ட் நடவடிக்கை

லண்டன், பிப். 11—

சோவியத் ரஷ்ய தலைமை உயர் நீதிமன்றத்தை (சுப்ரீம் கோர்ட்டை)ச் சேர்ந்த 6 நீதிபதிகள் தத்தம் பதவிகளிலிருந்து நீக்கப்பட்டுவிட்டனர் என்றும், இந்த நீக்கல் உத்தரவை ரஷ்ய மக்கள் சபை பிறப்பித்தது என்றும் செய்திகள் அறிவிக்கின்றன.

அவர்கள் நீக்கப்பட்ட உடனேயே ரஷ்ய தலைமை உயர்நீதிமன்றத்திற்கு 7 புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுவிட்டனராம்.

ரஷ்யாவின் தலைமை உயர் நீதிமன்றம் 70-க்கும் அதிகமான உறுப்பினர்களையும், 35 மக்களின் 'அசெசர்'களையும் கொண்டதாகும்.

தற்போதுள்ள இந்த நீதிமன்றத்தை சோவியத் மக்கள்சபை 5 ஆண்டு பதவி காலத்தில் தேர்ந்தெடுத்திருக்கிறது.

தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட பெரியா இதே நீதிமன்றத்தில்தான் விசாரிக்கப்பட்டார்.

சோவியத் அரசியல் சட்டப்படி, நீதிமன்றங்கள் யாவும் தன்னிச்சையாகவே இயங்கும். தேர்ந்தெடுத்தவர்களே நீதிபதிகளையும், அசெசர்களையும் திரும்ப அழைத்துக் கொள்ளும் உரிமையை அரசியல் சட்டத்தின் மூலம் பெற்றுள்ளார்கள்; அல்லது, நீதிமன்றத்தின் தீர்ப்பின்பேரிலும் அவர்கள் விலக்கப்படலாம்.

'500 ஆடுகள் பலியிட்டு என் அன்பைப் பெறுக!'

மணியக்காரரின் மனைவியின் கனவில் தோன்றிய காளிதேவியின் கோரிக்கை!

200 ஆடுகளுக்குப் பதில் 50 மதுக் குடங்கள் வைக்கப்பட்டன

போலீசார் தலையிட்டு பலியை நிறுத்தினர்

இந்தூர், பிப். 12—

அச்யசோணி என்னும் கிராமத்தில் காளியின் சிலை முன்னர் கிராம மக்கள் 300 ஆடுகளைப் பலியிட்டு, சுமார் 50 பானைகள் மதுவகைகளையும் படைக்க பிரமாதமான ஏற்பாடுகள் செய்திருந்தார்களாம்; ஆனால், போலீசாரும், கலால் இலாகா போலீசாரும் சேர்ந்து இப்பெரிய 'தியாக'த்தை தடுத்துவிட்டனர்.

இந்தக் கிராமத்தில் சிலை வடிவில் வாழும் 'காளிமாதா,' இக்கிராமத்தின் பட்டாமணியத்தின் மனைவியின் கனவில் தோன்றி, 100 ஆண்டுகளுக்கு ஒரு முறை தனக்கு 500 ஆடுகள் பலியிடுவது என்றும், இப்போது அந்த நேரம் வந்துவிட்டது என்றும் ஞாபகப்படுத்தியதாகச் சொல்லப்படுகிறது.

கனவில் காளிமாதா சொன்னதைச் செய்யாவிட்டால், தேவியின் கோபத்திற்கு ஆளாக நேரிடுமே என்று கிராம மக்கள் கூடி, தேவியின் சிலை முன்பு 300 ஆடுகளைப் பலியிடுவது என்று முடிவு செய்தார்களாம். 300 ஆடுகளுக்கு மேல் பலியிட அவர்கள் பொருளாதாரநிலை இடம் கொடுக்கவில்லையாம். ஆகவே, மீதம் பலி கொடுக்க வேண்டிய 200 ஆடுகளுக்குப் பதில், 50 பானைகளில் மதுவை வைத்து, தேவியின் கோரிக்கையைப் பூர்த்தி செய்வது என்று அவர்கள் முடிவு செய்தார்களாம்.

குறிப்பிட்ட நாளன்று 3000 மக்கள் கோவிலின் முன்பு தயாராக நின்றார்களாம். 'தேவி'க்குப் பலியிட 300 ஆடுகளும் வரிசையாக நிறுத்தப்பட்டிருந்தனவாம்; 50 மதுக் குடங்களும் நன்றாகத் திறந்து வைக்கப்பட்டிருந்தனவாம்.

பலி ஆரம்பமாகப் போகும் சமயத்தில் போலீசார் அங்கு வந்து 300 ஆடுகளையும் கைப்பற்றிவிட்டார்களாம். 50 பானைகள் மதுவையும் கீழே கொட்டிவிட்டார்களாம்.

நிறவெறிக் கொடுமையின் உச்சநிலை!

கொட்டும் மழையில் 150 குடும்பங்கள் வெளியேற்றப்பட்டன

ஜோகனஸ்பர்க், பிப். 11—

தென்னாப்பிரிக்காவின் சரித்திரத்திலேயே இதுவரையும் கண்டில்லாத அளவுக்கு நிறத்துவேஷமும், அதன் காரணமாக கறுப்பரை வெளியேற்றும் தீவிரச் செய்கைகளும் நடைபெற்றுள்ளன.

நேற்று சுமார் 1,000 பேர்கள் அடங்கிய சுமார் 150 கறுப்பர் குடும்பங்கள் கொட்டும் அடைமழையிலும் நகரை விட்டு அப்புறப்படுத்தப்பட்டிருக்கின்றன; இதற்குக் காவலாக நூற்றிலடங்காத போலீசாரும் இருந்திருக்கின்றனர்.

இவர்கள் மட்டுமல்லாமல், ஜோகனஸ்பர்க் நகரின் மேற்குப் பகுதிகளிலுள்ள மேலும் 60,000 கறுப்பரை வெளியேற்றிவிடுவதெனவும், தென்னாப்பிரிக்கா தீர்மானித்துவிட்டது.

ஜோகனஸ்பர்க் நகரையும், அதைச் சுற்றியுள்ள இடங்களிலும், 4 பேருக்கு அதிகமாகக் கூடிப் பேசக்கூடாதென 144 தடையுத்தரவும் பிறப்பிக்கப்பட்டுவிட்டது தென்னாப்பிரிக்க சர்க்காரால்!

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க.தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை
சென்னை 12—2—1955 சனி

யார் பொறுப்பாளி?

பொதுவாக நாட்டில் பல திறப்பட்ட மக்களிடத்திலும், அவர்கள் எத்தகைய தொழிலில் ஈடுபட்டுக்கொண்டு இருப்பவர்களாக இருந்தபோதிலும், புதியதோர் மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. அப்புதிய மாறுதலின் விளைவாக மக்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் அனைத்திலும், பெரிதும் எல்லா நிகழ்ச்சிகளிலும் கலந்திருப்பது போன்றே நன்மையும், தீமையும் கலந்தே இருக்கின்றன. நன்மையை வரவேற்று ஆதரித்து, தீமையை வெறுத்து ஒதுக்கிவிடுவதுதான் அறிவாளிகள் கடமையேயல்லாது, மக்களிடம் காணப்பெறும் புதிய மாறுதல் உணர்வை இழித்துப் பழித்துக் கூறுவது முறையாகாது. அப்படிக் கூறுவதினாலும், ஏற்பட்டுவிட்ட மாறுதல் மறைந்துவிடவும் விடாது—தேங்கிவிடவும் விடாது.

இப்புதிய மாறுதல், வயதுவந்த பொதுமக்களிடத்தில் காணப்படுவதோடு நின்றுவிடவில்லை. மாணவர் உலகத்தையும் அந்த மாறுதல் பற்றிக்கொண்டு இருக்கத்தான் செய்கிறது. பொதுமக்களை இயக்குவிப்பதைக் காட்டிலும், அப்புதிய மாறுதல் உணர்வு மாணவர்களை மிகமிகத் தீவிரமாக இயக்குவிக்கிறது. வயதுவந்த மக்களுக்கும், வாலிப மாணவர்களுக்கும் இருந்துவரும் வாழ்க்கைப் பொறுப்பிலும், கடமையிலும் உள்ள பெரும் வேற்றுமையே, மாணவர்களிடம் காணப்பெறும் தீவிரமான மாறுதல் உணர்விற்கான முக்கிய காரணமாகும்.

இத்தீவிர மாறுதல் உணர்வு வயதுவந்த மக்களிடம் இலைமறை காயாகப் பணியாற்றி வருகிறது. ஆனால், இளைஞர்களிடமோ, பிறர் கவனத்தைக் கவரும் வகையில்——தைக்கும் முறையில், செயல்பட்டு வருகிறது.

பொதுவாக இளைஞர்களிடமும், குறிப்பாக மாணவர்களிடமும் இருந்து எழும் தீவிர மாறுதல் உணர்வு தங்களுக்குக் கேடு பயப்பதாக இருக்கிறது என ஆட்சி பீடத்தில் அமர்ந்திருக்கும் காங்கிரஸ் கட்சியினர் கருதுகின்றனர்—அல்லது கேட்டை உண்டாக்கிவிடுமோ என அஞ்சுகின்றனர். எனவே, அந்த உணர்வை கேலி செய்யவும், கண்டிக்கவும், அறவே கைவிட வேண்டுமெனப் போதிக்கவும் காங்கிரஸ் தலைவர்கள் எனப்படுவோர் முந்துகின்றனர்.

தீவிர உணர்வை மேற்கொள்ளக்கூடாது என மாணவர்களுக்கு அறிவுரை கூறக் கிளம்பும் காங்கிரஸ் தலைவர்கள், ஒரே ஒரே உண்மையை மட்டும் மறந்துவிடுகின்றனர். அதாவது, எதிலும் தீவிர உணர்வு கொள்ளும்படியாக மாணவர்களையும், இளைஞர்களையும் முன்பு தூண்டியவர்கள் தாங்கள்தான் என்ற உண்மையை அவர்கள் மறந்துவிட்டனர்.

காங்கிரஸ் தலைவர்களால் முன்னாள் தூண்டப்பட்ட தீவிர உணர்வு அக்காலத்து ஆட்சியாளர்களைத் தாக்குவதாகஇருந்தது. ஆனால் இன்னாள் இளைஞர்களிடையிலும் மாணவர்களிடையிலும் இருந்து கிளம்பும் தீவிர உணர்வு காங்கிரஸ் ஆட்சியைத் தாக்குவதாகஇருக்கிறது. எனவே, தங்களுக்குப் பாதகமாக இருக்கும் ஒரு காலத்தில் தாங்களே தேவையாக இருக்கிறது எனக் கூறிய தீவிர உணர்வை, இன்று அதே காங்கிரஸ் தலைவர்கள் தணிக்க முயலுகின்றனர். இதுதான் அவர்கள் முயற்சியில் மறைந்திருக்கும் உண்மை.

காங்கிரஸ் தலைவர்களின் முன்னாள் நடவடிக்கையையே தங்களுக்கு ஒரு முன் மாதிரியாகக்கொண்டு, காங்கிரஸ்ஆளவந்தார்களுக்கு எதிராக மாணவாகள் — இளைஞர்களிடையே தீவிர உணர்வை பிறகட்சியினா தூண்ட முனைகின்றனர். பிற கட்சியின் தொடர்பில்லாது தானாக எழும் மாணவர் கிளர்ச்சியும், காலப்போக்கில் பிற அரசியல் கட்சிகளின்தொடர்பைப் பெறும் நிலை ஏற்பட்டுவிடுகிறது.

முன்னாள் இருந்துவந்த எத்தகைய: கேடுகளைக் களைய, மாணவர்களும் இளைஞர்களும் தீவிரம் கொள்ளவேண்டும் எனக் காங்கிரஸ் தலைவர்கள் கூறினார்களோ, அதே கேடுகள் தங்கள் ஆட்சியிலும் இல்லாமல் இருக்கக் காங்கிரஸ் தலைவர்கள் பார்த்துக்கொள்ள வேண்டும். அதுவுமன்றி, இளைஞர்களும் மாணவர்களும் பெற்றுள்ள மனமாற்றத்திற்கொப்ப, மேலும் கூடுதலான மனமாற்றத்தை காங்கிரஸ் ஆளவந்தார்களும் பெற்றாக வேண்டும்.

ஏகாதிபத்திய ஆட்சி காலத்தில் இருப்பதாகக் காங்கிரஸ் தலைவர்களால் சுட்டிக்காட்டப்பட்ட கேடுகள் அனைத்தும், காங்கிரஸ் ஆட்சியிலும் களைந்தெறியப்படாமல் இருந்தே வருகின்றன. நாட்டுத் தலைவர்கள் என்ற முறையில் பேசிப்பழகிவந்த அதிகாரக் குரல், அதிகாரத்தைக் கைப்பற்றினதும் அன்பு ஒழுகும் அபயக்குரலாக காங்கிரஸ் தலைவர்கள் மாற்றிக்கொண்டு இருக்க வேண்டும். ஆனால் காங்கிரஸ் தலைவர்களோ, முன்னாள் அதிகாரக் குரலை உயர்ந்த ஆணவக் குரலாக மாற்றிக்கொண்டு உள்ளனர்.

ஏற்கனவே இந்தக் கேடுகளையும் களைய முயலாமல், அன்பு முறையில் மக்களை அணுகும் உயர்போக்கையும் கைக்கொள்ளாமல், தீவிர உணர்வை மாணவர்களும் இளைஞர்களும் மட்டும் கைவிட்டுவிட வேண்டுமென காங்கிரஸ் தலைவர்கள் கூறிவரும் நன்மதி, அதற்குரிய தோல்வியைப் பெறுவதில் ஆச்சரியமொன்றுமில்லை.

பொதுவாக இளைஞர்களிடமும்,குறிப்பாக மாணவர்களிடமும் நிலவிவரும் புதிய மனப்போக்கிற்கும், ஆளவந்தார்களிடமும், அவர்கள் நிலையிலுள்ள மற்ற துறைகளில் இருக்கும் அதிகாரிகளிடமும் நிலவிவரும் மாறு மனப்போக்கிற்கும் இடையில் பெரும் பிளவு இருந்து வருகிறது. இந்தப் பிளவுதான், குறிப்பாக மாணவர்களிடை ஏற்படும் கிளர்ச்சிக்கெல்லாம் மூலகாரணமாக இருந்து வருகிறது. எவ்வளவு விரைவில் இப்பிளவு நீக்கப்படுவதற்கான முயற்சி எடுத்துக் கொள்ளப்படுகிறதோ, அதைப் பொறுத்துத்தான் இருக்கிறது மாணவர் உலகில் அமைதி நிலவுவதும் நிலவாததும். இத்தகு சூழ்நிலையை வெறும் இதோபதேசத்தால் உண்டாக்கிவிட ஒருபோதும் இயலாது.

இருந்துவரும் இப்பிளவின் உண்மையை அறிய விரும்புவோர், மாம்பலம் தக்கர் பாபா வித்தியாலய மூடு விழாவிற்கான காரணத்தை நுணுகி ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

அப்பள்ளி துவங்கி 21 ஆண்டுகள் ஆகின்றன. அங்கு கல்வி பெறுவோர் தொகை 120. அதில் ஒரு பார்ப்பன மாணவரும், 17 பின்தள்ளப்பட்ட வகுப்பு மாணவர்களும் கல்வி பெற்று வருகின்றனர். மற்ற மாணவர்கள் பழங்குடி மரபைச் சேர்ந்தவர்களாவர்.

அப்பள்ளியில் தையல்வேலை, பிரம்பு வேலை, தச்சு வேலை, முதலிய தொழிற் பயிற்சி மாணவர்களுக்குத் தரப்படுகின்றன. அங்கு அதிக மணி வேலை செய்வதற்கான அதிகப்படியான கூலி கேட்டதில் தையல் பயிற்சி ஆசிரியருக்கும் நிர்வாகிக்கும் பிணக்கு ஏற்பட்டதாம். அந்தப் பிணக்கு பள்ளியையே தற்காலிகமாக மூடிவிடுவதில் வந்து முடிந்திருக்கிறது.

அத்தையல் ஆசிரியரை வெளியேற்றிவிட்டது நிர்வாகம். அவரை மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென தையல் கலை பயின்றுவரும் பிரிவைச்சேர்ந்த சில மாணவர்கள் வற்புறுத்தினர். அவ்வாறு வற்புறுத்திய ஐந்து மாணவர்களை, பள்ளியிலிருந்தும் உணவு விடுதியிலிருந்தும் வெளியேற்றிவிட்டது, நிர்வாகம். வெளியேற்றிய மாணவர்களை மீண்டும் சேர்த்துக் கொள்ளவேண்டுமென மற்ற மாணவர்கள் கிளர்ச்சி செய்யத் துவங்கினர். அவர்கள் கோரிக்கையை ஒப்ப மனமில்லாத நிர்வாகம், பள்ளிக்கூடத்திற்கே மூடு விழா செய்துவிட்டது!

மாணவர்களின் தீவிர உணர்வைக் காட்டிலும், எந்த வகையிலும் பள்ளியின் பொறுப்பாளரின் ஆத்திரமும் ஆவேசமும் அவசரமும் குறைந்திருப்பதாக இல்லை.

மாணவர் பிரச்சினையை அணுகுவதில் கொஞ்சம் அன்புடைமையைமேற்படி பள்ளிக்கூட பொறுப்பாளர் மேற்கொண்டிருந்தாலும், இம்மூடுவிழாவிற்கு அவசியமே ஏற்பட்டிருக்காது. மாணவர்களைக் காட்டிலும், பொறுப்பாளருக்கு அதிகப் பொறுப்பு உண்டு. அப்பொறுப்பை உணர்ந்து நடக்கப் பொறுப்பாளர் தவறிவிட்டதின் விளைவுதான் மேற்படி மூடுவிழா!

சென்ற ஆண்டிலும் இப்பள்ளி உணவு விடுதி முன்னெச்சரிக்கை இல்லாமல் தற்காலிகமாக மூடப்பட்டதும், உணவு விடுதி மாணவர்கள் சோற்றுக்கில்லாமல் திண்டாடினதும், மானக்கேடாக உணவு விடுதியில் நடத்தப்படுகிறோம் என பழங்குடி மாணவர்கள் குறைபட்டுக் கொண்டதும், இத்தொடர்பில் கருதிப் பார்க்கத் தக்கது.

மாணவர்களுக்கும், அவர்களைப் பயிற்றுவிக்கும் பொறுப்பில் உள்ள பொறுப்பாளர்களுக்கும் உள்ள மனப்பாங்கில் காணப்படும் பிளவுதான் இம்மூடுவிழாவிற்குக் காரணம் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். இப்பிளவு மற்ற இடங்களிலும் கூடுதலாகவோ, குறைவாகவோ இருந்துவருகின்றன. பிளவு ஒழிக்கப்பட வேண்டும். இல்லையேல் பல துறைகளிலும் மூடுவிழாதான் நடைபெற இடமுண்டாகும்.

திருமண முடிவை மேற்கொள்ள!

மணமக்களுக்கேசந்தர்ப்பம்

காலதாமதத்தைக் குறைக்கவே இந்த ஏற்பாடாம்

நிரந்தரமான வாழ்க்கைத் துணைவனையும் துணைவியையும் தாங்களாகவேதேடித் கொள்ளுவதற்கு திருமண வயது வந்த ஆண்களும் பெண்களும் 'மனம்விட்டு'ப் பேசி முடிவு செய்துகொள்வதற்கான சிற்றுண்டிச்சாலைகளும், சங்கங்களும் (கிளப்) ஏற்படுத்தலாமென்று, நாகபுரியில், திருமண வயதடைந்தோரின் 'கார்டியன்'கள் கூட்டமொன்றில் யோசனைகள் தெரிவிக்கப்பட்டு, இவ்வுத்தேசத் திட்டத்திற்காக ஒரு குழுவும் அமைக்கப்பட்டது.

திருமண பேச்சுவார்த்தைகளில் ஏற்டும் அனுவசியமான காலதாமதத்தைப் போக்கவே இப்புது வழி கண்டுபிடிக்கப்பட்டுள்ளதென்றும், திருமண ஆண்—பெண்களின் பேச்சுவார்த்தைகள் யாவும் பெரியோர்களின் 'மேற்பார்வை'யிலேயே நடைபெறும் என்றும் கூறப்படுகிறது.

கைவிடலாம்!

பார்மோசா பகுதியில் ஐ. நா.-வின் மூலம் போர் நிறுத்தம் ஏற்படுத்தும் முயற்சியை அமெரிக்கா கைவிட்டு விடலாம் என்றும், காமன்வெல்த் பிரதமர்கள் மாநாட்டில் கலந்துகொண்ட பிரதமர்களின் வற்புறுத்தலே இதற்குக் காரணம் என்றும் கூறப்படுகிறது.

அணுகுண்டுகளை அழிக்க வேண்டாம்

அவற்றின் சக்தியை ஆக்க வேலைக்குப் பயன்படுத்தலாம்

அலகாபாத், பிப். 10—

நூற்றுக்கணக்கில் தயாரித்து வைத்திருக்கும் அணுகுண்டுகளையெல்லாம் அழிக்கவே வேண்டியதில்லை என்றும், மாறாக, அக்குண்டுகளைப் பிரித்து, அவற்றினுள்ளே சேர்த்து வைக்கப்பட்டிருக்கும் சக்திகளை மின்சார சக்தியாக மாற்றி அதை ஆக்கவேலைகளுக்குப் பயன்படுத்தலாம் என்றும் நோபல் பரிசு பெற்ற பேராசிரியர் லூனஸ் பாலிஸ் என்பவர் தெரிவித்திருக்கிறார்.

மேலும் அவர் கூறினார் :—

"ஒரு லட்சம் டன் நிலக்கரியைக் கொண்டு தயாரிக்கிற அளவு மின்சார சக்தி ஒரு அணுகுண்டில் மட்டுமே அடங்கியுள்ளது. நிலக்கரியோ அல்லது, தண்ணீரால் கிடைக்கப் பெறும் சக்தியோ கிடைக்காத இடங்களில், மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த இந்த சக்தியை ஏன் உபயோகிக்கக் கூடாது ?

"அணுகுண்டுகளை வெடிக்க வைப்பதினால் காற்றில் ரேடியக் கதிரின் சாம்பல்கள் கலந்துவிடுகின்றன. உயிர் வாழ்வதற்கு மனிதர் காற்றை சுவாசிப்பதால், இதன் காரணமாகவே மனித வாழ்க்கைக்கு அபாயமான விளைவுகளும் ஏற்படலாம்."

பரீட்சை முறைகளைத் திருத்தியமைக்க......!

பூனா பல்கலைக் கழகம் சிபாரிசு

பூனா பல்கலைக் கழக நீதி மன்றம், இப்போது பல்கலைக் கழகத்தில் பின்பற்றப்பட்டுவரும் பரீட்சை முறை முழுவதையும் திருத்தியமைக்குமாறு செயற் குழுவிற்கு சிபாரிசு செய்து தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

பட்டம் பெறும் படிப்புகள் எல்லாம், ஒவ்வொரு பிரிவாக மாணவர்கள், கல்லூரி ஆசிரியர்களால் சோதிக்கப்பட்டு அவ்வப்பொழுது தேர்வு நடைபெறுவதின் மூலம செயல்பட வேண்டும் என்று தீர்மானம் கோருகிறது. இதனால் மாணவர்களுக்கு இறுதிப் பரீட்சையின்போது உள்ள படிப்புச் சுமை குறையக்கூடும் என்று கூறப்படுகிறது.

மாணவர்களுக்கு பட்டம் வழங்குவதில் அவர்கள் கல்லூரியில் ஆசிரியர்களின் முன்னிலையில் செய்யும் நேரான செய்முறை வேலைகளுக்கு அதிகமாக, மதிப்புத் தரப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

உருண்டோடும் பணம் இன்றி - உலகத்தைச் சுற்றிய ஆசிரியர்!

பம்பாய், பிப். 9—

கையில் காலணாக்கூட இன்றி உலகத்தின் பல நாடுகளில் ஒரு லட்சம் மைல் சுற்றுப் பயணம் செய்துவிட்டுத் திரும்பியிருக்கிறார் சௌராஷ்டிரத்தைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர்.

கல்லுபாய் ஜிஜாபாய் பாசியா என்ற 65 வயதான அந்த ஆசிரியர் ஆறு ஆண்டுகளுக்கு முன் ஒரு நாள் உலகைச் சுற்றிப் பார்க்க வேண்டுமென எண்ணினார். ஆனாலும் அவரிடம், பழைய துணிகள் கொண்ட பை ஒன்றைத் தவிர வேறு காலணாக்கூட இருக்கவில்லை.

பணமில்லை என்ற குறையைக் கருதாது 1948-ல் பம்பாயிலிருந்து லண்டன் பயணமாகி அங்கு சொற்பொழிவுகள் நிகழ்த்துவதின் மூலம் பணம் திரட்டிக் கொண்டார். அங்கு வானொலி நிகழ்ச்சிகளிலும்பங்குபெற்று பணம்திரட்டியிருக்கிறார், தனது வழிச் செலவிற்காக.

பின்னர் இங்கிலாந்து சுற்றுப் பயணம் முடிந்ததும், பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, கிரீஸ், யூகோஸ்லேவியா, துருக்கி ஆகிய நாடுகளில், பஸ், ரெயில் மூலம் பிரயாணம் செய்திருக்கிறார்.

பின்னர் மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்று, ஒவ்வொரு அரபு நாடுகளையும் கண்டார்; பின் ஆப்பிரிக்கக் கண்டத்திற்குச் சென்று, அங்கும் பல இடங்களையும் சுற்றிப் பார்த்தார்.

அமெரிக்கா, கானடா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, தாய்லந்து, பர்மா இந்தோனேஷியா, ஜப்பான் சீனா, பிஜி ஆகிய நாடுகளுக்கும் சென்றிருக்கிறார்.

இப்படி இவர் வாழ்நாள் முழுதும் உலகத்தைச் சுற்றுவதில் ஈடுபட்டிருக்கும் இந்த ஆசிரியர் தமது இளவயதில், பல புத்தகங்கள் கொண்ட ஒரு 'நடமாடும் வாசகசாலை'யை தமது சைக்கிளில் வைத்துச் சுற்றிக்கொண்டே நடத்தியிருக்கிறார்.

இவரைக் கவர்ந்த நாடு நியூசிலாந்து என்று கூறுகிறார்.

'சட்டம் கொண்டு தடுக்கிற அளவு நாடகத்துறை மறுமலர்ச்சி பெற்றிருக்கிறது'

காஞ்சி நாடகத்தில் பொதுச்செயலாளர் அண்ணுதுரை

5-2-55 இரவு 10-மணியளவில் காஞ்சி கண்ணன் டாக்கீசில், தி. மு. கழகப் பொதுச்செயலாளர் அண்ணுதுரை தலைமையில்தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் நாடகக் குழுவினரின் 'இன்பக் கனவு' நாடகம் நடைபெற்றது. ஏராளமான மக்கள் திரண்டு வந்திருந்தனா. நாடக இறுதியில் தோழர் பெருமாள் நன்றி கூறினுர்.

பொதுச்செயலாளர் அண்ணுதுரை அவர்கள் எம். ஜி. ஆர். நாடகக் குழுவினரைப் பாராட்டிப் பேசுகையில், தோழர் இராமச்சந்திரன் அவர்கள் நாட்டில் சமூக சீர்திருத்த, பகுத்தறிவுக் கொள்கைகளையும்,மக்களிடையே விழிப்புணர்வையும், தெளிவையும் ஏற்படுத்தப் பாடுபடுகிருர் என்று குறிப்பிட்டார்.

மேலும் அவர் தொடர்ந்து பேசுகையில், இன்றைய அரசியலில் நாடகத் தடைச் சட்டம் கொண்டுவர வேண்டிய அளவில் நாடகத்துறையில் மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளதை விளக்கினுர்.

"புராணக் கதைகளையும், மூட நம்பிக்கையை வளர்க்கும் நாடகங்களையும் மக்கள் பார்க்க விரும்புவதுமில்லை ; நாடக மன்றத்தார்களும் அவைகளை முன்போல் நடிக்க முன்வருவதுமில்லை" என்று குறிப்பிட்டார்.

அறிவு வளர்ச்சிக்கான அடிப்படையில் நடைபெறும் நாடகங்களைப் பார்ப்பதற்கே மக்கள் மகிழ்வும் ஆர்வமும் கொள்வதுடன், அந்நாடகங்களுக்கு சிறந்த ஆதரவும் தருகிருர்கள் என்பதற்கு இன்றைய நாடகமே ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும் என்றும் கூறினுர்

பொதுச் செயலாளர் அண்ணுதுரை அவர்களுக்கும் தோழர் எம். ஜி. இராமச்சந்திரனுக்கும் கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டன. இறுதியில் தோழர் எம். ஜி. ஆர். அவர்கள் பாராட்டுதலுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டார்.

சென்னை நகர பொதுநல சங்கம்

"நாடு முன்னேற்றமடைய, வசதியில்லாமல் வாழும் ஏழைக் குடிசை வாழ்வோர் நலன்களை உடனடியாகக் கவனித்துத் தொண்டு செய்யுமாறும், சங்கத்தாரும் தங்களாலியன்ற அளவு சிற்சில இடங்களில் பொதுநலத் தொண்டு புரிந்து வருவதாகவும், சங்கத்தில் நிதி இல்லாத காரணத்தால் பொது மக்கள் தங்களால் இயன்ற பொருளுதவியும் உடலுழைப்பும் தந்து உதவுமாறு கேட்டுக்கொள்கிறேம்" என்று சென்னை—நுங்கம்பாக்கம், எண், 15-டி, குமரப்ப முதலி தெருவில் அமைந்துள்ள மேற்படி சங்கம் கோரிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறது.

பொன்மலை ஆசிரியர் கழகம்

22—1—55 காலை $10\frac{1}{2}$ மணியளவில் மேற்படி ககழத்தின் இவ்வாண்டு முதற் கூட்டம் திரு. இருதயத் துவக்கப் பள்ளியில் தோழர் ரா கிருட்டின ராவ் தலைமையில் நடைபெற்றது. கழக வரவு-செலவு கணக்குகள் ஒத்துக் கொள்ளப்பட்டது.

முடிவுகள் சில செய்யப்பட்ட பின், தோழர் ஏ. கனகரத்தினம் 'யாகாவாராயினும்.........' என்ற குறட்பாவுக்கு இலக்கியச் சான்றேடும் தமிழர் பண்பாட்டுடனும் விளக்கம் தந்தார்.

பின்னர், இவ்வாண்டிற்கான கழகச் செயலாளராகத் தோழர் ஏ. கனகரத்தினம் அவர்களும், துணைச் செயலாளராகத் தோழர் ம. சவரிமுத்துவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பிப். திங்கள் 19-ந்தேதியன்று கழகத்தின் அடுத்தக் கூட்டம் நடைபெறுவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

சேலம் ஆசிரியர்கள் பயிற்சி முகாம்

மேட்டூர் அரசினர் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில், சேலம் நாட்டாண்மைக் கழகத்தில் பணி புரியும் 107 ஆசிரியர்களுக்கு குறுகிய காலப் பயிற்சி கொடுக்கப்பட்டது. அப்பயிற்சியில் முக்கிய பங்கெடுத்துக் கொண்ட ஆசிரியர்களையும், ஒத்துழைத்த ஆசிரியர்களையும் பாராட்டுமுகத்தான் 28—1—55ல் திரு. கோபாலன் தலைமையில் தேநீர் விருந்தும், பாராட்டுக் கூட்டமும் நடைபெற்றது.

காமராசரிடம் கோரிக்கை

4—2—55 காலை 9 மணிக்கு, கோவை மாவட்டம், ப. நா. புதூர் கிராமத்திலுள்ள பள்ளிக் கட்டிடத் திறப்பு விழாவில் கலந்துகொண்ட சென்னை முதலமைச்சர் காமராசருக்கு, ப. நா. புதூர் தி. மு. கழகத்தவர் வரவேற்பு மடலொன்று வாசித்தளித்து, கைத்தறித் துண்டும், கருப்புக் கைக்குட்டைத் துணியொன்றும் அளித்தனர். வரவேற்பில், டால்மியாபுரத்தை கல்லக்குடியாக மாற்றவேண்டுமென்றும், நாடகத் தடைச் சட்டத்தைக் கைவிடும்படியும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

கோவை அழகிரி நினைவுப் படிப்பகம்

6—2—55ல், தோழர் சி. ஆர். எஸ் மணி தலைமையில் நடைபெற்ற படிப்பக உறுப்பினர்கள் கூட்டத்தில், புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :— செயலாளர் : குணளன் ; துணைச்செயலாளர் : மு. இராமநாதன் ; பொருளாளர் : க. அங்குதாசு ; மற்றும் 8 பேர் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அரிஜன மாதர் முன்னேற்ற இயக்கம்

2—2—55 காலை 10 மணிக்கு, மதுரை இஸ்மாயில்புரம் 12-வது தெரு, மதார் சாகிப் சந்து, எண். 2 இல்லத்தில், தோழியர் ஆர். இந்திரா தலைமையில் மேற்படி இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. தோழியர் ஆர். இந்திரா தலைவராகவும், கே ருக்மணி காரியதரிசியாகவும், பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அழகிரி இரவுப் பள்ளி துவக்கம்

5—2—55 இரவு 7 மணியளவில், கும்மிடிபூண்டி தி. மு. கழகச் சார்பில், வேற்காடு எனும் சிற்றூரில் தோழர் இராதாமணளன் அவர்களை ஆசிரியராகக்கொண்ட அழகிரி இரவுப்பள்ளி என்று துவக்கப்பட்டது. கல்வியறிவு பெருதவர்களுக்கு இப்பள்ளியில் இலவசமாகக் கற்றுத்தரப்படுகிறது.

விருதுநகர் எம். எஸ். பெரியசாமி படிப்பகம்

30—1—55 காலை 11 மணிக்கு படிப்பக உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றபோது, விருதுநகர் தோழர் எம். எஸ். பெரியசாமி மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்ட பின்னர், சென்னை சர்க்காரின் புதிய நாடகத் தடைச் சட்டத்தைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. பின்னர், நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :— தலைவர்: எம். நாகராசன்; துணைத் தலைவர்: வி எம். டி. ஜலால்; செயலாளர்: எம் கருப்பையா; துணைச் செயலாளர்: கே. திரவியம்; பொருளாளர்: கா. கு. சின்னப்பன்; பொறுப்பாளர்: எல். கருப்பையா. மற்றும் நிர்வாக உறுப்பினர்களாக 12 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

குடந்தை இளைஞர் தமிழ் மன்றம்

குடந்தை இளைஞர் தமிழ் மன்ற அலுவலர்களின் தேர்தல் கூட்டம் 6—2—55 இரவு 9 மணிக்கு, மன்றத்தில் தோழர் பு. செ. கிருட்டிணன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பு. செ. கிருட்டிணன், செ. இரா. இராதாகிருட்டிணன், மொ. கு. கிருட்டிணமூர்த்தி ஆகியோர் தேர்தல் அதிகாரிகளாக இருந்தனர்.

தலைவர் : டி. எல். ஆர். கோபால்; துணைத்தலைவர் : எஸ். என். அனந்தாச்சாரி ; செயலாளர் : ஆர். வி. துளசிராமன் ; துணைச்செயலாளர்: வி. ஆர். ராமாச்சாரி ; பொருளாளர் : எ. கே. வெங்கடாச்சாரி ; இலக்கிய மன்றச் செயலாளர் : சி. கே. கோபாலன் ; மன்ற நூலகச் செயலாளர் : திரு. ஜே. ஆர். கஸ்தூரி ; மன்ற பாதுகாப்பாளர் : கே. வி. ரெங்காச்சாரி.

திருவப்பூர் தமிழ் மன்றம்

6—2—55 காலை 10 மணிக்கு, மன்றக் கட்டிடத்தில், தோழர் வே. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்ற மன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில், புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :— தலைவர் : மா. சுந்தரேசன் ; துணைத்தலைவர் : நா. கருப்பய்யா ; செயலாளர்கள் : எஸ். திருமலை, வி சண்முகம் ; பொருளாளர் : கே. எஸ். சாகுல் அமீது ; மற்றும் 7 பேர் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

வேலூர் சர்க்கார் மருத்துவமனை சிப்பந்திகள் கூட்டம்

3—2—55 இரவு 7 மணிக்கு, மேற்படி கூட்டம் நடைபெற்றபோது, தோழர்கள் ஆ. மணி எழிலன், வே. அ. இளஞ்செழியன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அழகிரி சொற்பயிற்சி மன்றம்—பரமக்குடி

23—1—55 இரவு 7 மணிக்கு, இவ்வூர் தி. மு. கழகக் கட்டிடத்தில், தோழர் ஆர். எஸ். பிரகாசம் தலைமையில் தி. மு. கழக தோழர்களால் அழகிரி சொற்பயிற்சி மன்றம் ஆரம்பிக்கப்பட்டு மன்ற நிர்வாகிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—செயலாளர் எஸ். ஜீவதாசன்; துணைச் செயலாளர் : என்.மதியரசு; செயலாளர், துணைச் செயலாளர் உள்பட ஐந்து பேர் களடங்கிய செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

ஊராட்சி மன்றத் தலைவர் வீட்டில் கொள்ளை

நஞ்சைத்தலையூரிலுள்ள ஊராட்சிமன்றத் தலைவரான எஸ். பெரியசாமி வீட்டிற்குள் 29-1-55 இரவு, யாரோ புகுந்து நகை, ரொக்கப்பணம், கைக்கடிகாரம் ஆக சுமார் 525 ரூபாய் மதிப்புள்ள சாமான்கள் கொள்ளையிட்டிருக்கின்றனர். போலீசார் புலன் விசாரிக்கிருர்கள். (ந. நி.)

சொற்பயிற்சி மன்றம் துவக்கம்

சென்னை—வியாசர்பாடி திருவள்ளுவர் நூல் நிலையத்தின் சார்பில், 4-வது வட்ட தி. மு. கழகத் தோழர் சேதுராசன் அவர்களால், 6—2—55 காலை 10 மணிக்கு மேற்படி மன்றம் துவக்கி வைக்கப்பட்டது. தோழர் விருதை ந. இராமசாமி சொற்பொழிவாற்றினுர்.

திரு. வி. க. படிப்பகம் துவக்கம்

2—2—55 மாலை 6 மணியளவில், சென்னை-தலுக்கர்தோட்டத்தில், தோழர் சச்சிதானந்தம் தலைமையில் படிப்பகத் துவக்க விழா கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் சக்திதாசன், மு. புரட்சிமணி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

பழைமையைக் காக்க பெண்கள் - - சவமொழி பயில வேண்டுமாம்!

ஓய்வு பெற்ற நீதிபதியின் கூற்று

"பழங்கால கலாச்சாரத்தையும், பழங்க வழக்கங்களையும் பாதுகாப்பதற்காக பெண்களுக்கு, சிறுவயதிலிருந்தே வடமொழி (சமஸ்கிருதம்) கற்றுத்தர வேண்டியது மிக அவசியமாகும் ; பெண்கள் தேசீய உயர்நிலைப்பள்ளி நிர்வாகிகள் பழங்கால கலாச்சாரத்தைப் பாதுகாக்க எடுத்துக்கொண்டுள்ள முயற்சியினைப் பாராட்டுகிறேன்.

"பெண்களுக்குக் கல்வி போதிப்பதை நமது முன்னேர்கள் எதிர்த்தார்கள் என்ற எண்ணம் சிலரிடம் இருப்பதை நான் கண்டிக்கிறேன் ; பழங்காலத்தில் பெண்களுக்குப் படிப்பதற்கு சந்தர்ப்பமோ நேரமோ இருக்கவில்லை ; இருந்தபோதிலும், இந்த இதிகாச 'ஞானம்' அவர்களின் மனதை வளப்படுத்திற்று ; அவர்களையும் நாகரீகமானவர்களாக்கிற்று.

"ஆண்கள், பழங்காலப் பழக்கங்களில் மெதுவாக நம்பிக்கை இழந்துவரும் இந்த நாட்களில், பழங்கால பழக்கங்களையும், நடத்தைகளையும் பாதுகாக்க வேண்டிய கடமை பெண்களைச் சார்ந்ததாகும் ; எனவே, பெண்கள் சமஸ்கிருதம் கற்றுக்கொள்ள வேண்டியது மிக அவசியமாகும்,"

—என்று, பெடரல் நீதிமன்ற முன்னுள் நீதிபதி எஸ். வரதாச்சாரியார், திருவல்லிக்கேணி பெண்கள் தேசீய உயர்நிலைப் பள்ளியில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிருர்.

அந்தப் பள்ளியில் சமஸ்கிருத மொழிக்காக மண்டபம் ஒன்று கட்டுவதற்கென மலாயாவில் குடியேறியிருந்த வெங்கு அய்யர் என்பவர், தமது காலஞ்சென்ற மனைவியின் பெயரால் ரூ. 11,111 நன்கொடை வழங்கியிருந்தார். அதைக் கொண்டு எழுப்பப்படவிருக்கிற 'சரஸ்வதி வெங்கு அய்யர் சமஸ்கிருத மண்டப'த்திற்கான அஸ்திவாரக்கல் நாட்டுகையிலேயே அவர் இப்படி பேசியிருக்கிருர்.

சிதம்பரம் தி. இ. மு. படிப்பகம்

30—1—55ல் திராவிட இளைஞர் முன்னேற்றப் படிப்பகச் சார்பில் தோழர் மு. கோவிந்தசாமி தலைமையில் நடைபெற்ற பொங்கல் விழா கூட்ட இறுதியில் சென்னை சர்க்கார் கொண்டுவந்துள்ள புதிய நாடகத் தடைச் சட்டத்தை ரத்து செய்யக் கேட்டுக்கொண்டும், நெய்வேலி சுரங்கத்தில் வேலை செய்த 150 பேரை வேலையினின்றும் சுரங்க அதிகாரி நீக்கியதை வன்மையாகக் கண்டித்தும் அவர்களுக்கு உடனடியாக மீண்டும் வேலை கொடுக்க வேண்டுமென கோரியும், அந்நகரில் கொசுக்களின் தொல்லையை நீக்கி சுகாதாரத்தைப் பேணும்படி நகரசபையினரைக் கேட்டுக் கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கால்பந்து போட்டி

முத்துப்பேட்டை கழக உயர்நிலைப்பள்ளி மாணவர்கள், கீழ தஞ்சையில் 29—1—55ல் நடைபெற்ற கால்பந்து போட்டியில் வெற்றி பெற்றதற்காக, திரு. ஏ. எஸ். என். முகம்மது மைதீன் அவர்களால் கொடுக்கப்பட்ட சுமார் ரூ. 250 பெறுமானமுள்ள வெள்ளிக்கோப்பையைதிரு செல்வராஜ் கொண்டுவர, மாணவர்களும் பிறரும் அடங்கிய ஊர்வலம் நடைபெற்றது. திரு முகம்மது மைதீன் அவர்களுக்கு திரு. ஜேம்ஸ் வேதநாயகம் மலர் மாலை அணிவித்தார்.

பகுத்தறிவு நடிக மன்றம்

8—2—55 இரவு 11 மணிக்கு, சென்னை-மூலக்கடையில், மேற்படி மன்றத் துவக்க விழா, தோழர் சி ப. தம்பிதுரை தலைமையில் நடைபெற்றது. . பின்னர் மன்ற நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர்: எம்.கே.சாமி; பொருளானர்: பி. எம். ராசன்; நிர்வாகி : அருச்சுனன்; மேற்பார்வையாளர்: ஆ. செயராசு ; அமைப்பாளர்: மு. ராசன். பின்னர் தோழர்கள் மா. ஏ. நிலாவழகன், மதிவாணன், குளத்தூர்மணி, மு. ராசன் ஆகியோர் நாடக மன்றத்தின் அவசியத்தைப் பற்றி பேசினர்.

தமிழ் நாடு தாழ்த்தப்பட்டோர் லீக்

6—2—55 இரவு, தமிழ் நாடு தாழ்த்தப்பட்டோர் லீக் பம்பாய் கிளையின் நிர்வாக உறுப்பினர்கள் கூட்டம் திரு. எம். வி. துரைசாமி தலைமையில் தாராவியில் நடைபெற்றபோது, தோழர்கள் ஏ. கே. ஐ டேவிட், வி. எஸ். ராஜ், ந. ஐ. சுப்பையா, மு. ரா. ஆறுமுகம், நா. பெ. மாடசாமி, ஒ. த. அய்யாச்சாமி, ந. சிவபாண்டியன், நா. ச. சுடலைமுத்து ஆகியோர் லீக்கின் முன்னுள்ள ஆக்க வேலைகள் குறித்துச் சொற்பொழிவாற்றினர்.

நகரத்தை - விரிவாக்க.....

சென்னை நகர எல்லைக்குள். சைதாப்பேட்டை தாலுகாவைச் சேர்ந்த திருவொற்றியூர் கிராமத்தைச் சேர்க்க வேண்டுமென மேற்படி கிராம இணைப்புக் குழு வெளியிட்ட யோசனையின் பேரில் சென்னை சர்க்கார் ரெவின்யூ போர்டு தெரிவித்துள்ள சிபாரிசை சர்க்கார் ஒப்புக்கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

சென்னை நகருக்குள் மேற்கொண்டு பகுதிகளைச் சேர்க்க நகரசபைக்கு வசதியாயிருக்கிறபோதும், அதிகமாக வரியை மக்கள் செலுத்தக்கூடிய நிலை அடைகிறபோதும் சர்க்கார் இந்த யோசனையைக் கவனிக்கலாமென்பதே மேற்படி போர்டு செய்துகொண்டுள்ள சிபாரிசாகும்.

'நச்சுக் கோப்பை'-நாடகம்

4—2—55-ல் நடைபெற்ற கரூர் கருணாநிதிநாடக மன்ற செயற்குழு கூட்டத்தில், மன்ற நிதிக்காக மார்ச்சு திங்கள் கடைசிவாரத்தில் தோழர் மு. கருணாநிதி எழுதிய 'நச்சுக் கோப்பை' நாடகம் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

பிறப்பு

பெரியகுப்பம் தி. மு. கழகத் தோழர் பொ. நாராயணன் அவர்கள் துணைவியார் 20—1—55 அன்று ஒரு ஆண் மகவுக்குத் தாயானுர். குழந்தைக்கு 28—1—55ல் 'பரிமளன்' என்று பெயரிடப்பட்டது. இதன் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிக்கப்பட்டது— வரப்பெற்றேம்—நன்றி—பொறுப்பாளர்.

அனுதாபம்

30—1—55ல் விருதுநகர் தி.மு கழகப் பேரவைக் கூட்டம் தோழர் வ. பெ. வடிவேல் தலைமையில் நடைபெற்றபோது விருதுநகர் தோழர் எம். எஸ். பெரியசாமி மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

'இந்தியா' ஒரு நாடு - என்போருக்குச் சூடு!

துணைக் கண்டம் என்று நேருவே கூறுகிறார்!

லண்டன், பிப். 10—

கோவா பிரச்சினை குறித்து பத்திரிகை நிருபர் ஒருவர், "இந்திய உப கண்டத்தில் பாகிஸ்தானும் ஒரு பகுதி என்பதை நினைவில் கொண்டு, கோவா நிலையை பண்டித நேரு கருதுவதைப்போலவே, பாகிஸ்தானையும் கருதுவாரா?" என்று கேட்டபோது, "பாகிஸ்தான் இந்தியத் துணைக் கண்டத்தில் ஒரு பகுதி என்பது உண்மையே; ஆனால், பாகிஸ்தான் பாகிஸ்தானியர்களாலேயே ஆளப்படுகிறது; கோவா, போர்த்துகீசியர்களால் ஆளப்படுகிறது" என்று பதிலளித்திருக்கிறார்.

இந்தியாவில் - நிறபேதமா?

புதுடில்லி ஆப்பிரிக்க மாணவர்கள் குற்றச்சாட்டு

புதுடில்லி, பிப். 10—

புதுடில்லி பல்கலைக் கழகத்தில் கல்வி பயிலும் ஆப்பிரிக்க மாணவர்கள் தாங்கள் நிறபேத உணர்ச்சிகளால் தொல்லைப்படுகிறோம் என்று கூறியிருக்கிறார்களாம். ஆனால் மற்ற மாணவர்களும் பல்கலைக் கழக அதிகாரிகளும் இக்குற்றச்சாட்டை மறுத்துள்ளனர்.

வடக்கு ரொடீஷியா, உகாந்தா, நியூசிலாந்து ஆகிய நாடுகளிலிருந்து டில்லி வந்து கல்வி பயிலும் மாணவர்கள், டில்லி ரோட்டரி கழகத்தில் பேசுகையில், தாங்கள் நிறபேத முறையில் பிரிவுபடுத்தப்படுகிறோம் என்று கூறினார்களாம்.

தங்களிடம் முதலில் தெரிவிக்காமல், இதுபோன்ற குற்றச்சாட்டை ஆப்பிரிக்க மாணவர்கள் பொது இடத்தில் கூறியது பற்றி பல்கலைக் கழக அதிகாரிகள் வருத்தமுற்றார்களாம்.

இந்தியர்களுடன் சமூகத் தொடர்பு தங்களுக்கு அதிகம் இல்லை என்றும், சில சமயங்களில் தாங்கள் வெளிப்படையாகவே கேலி செய்யப்பட்டதாகவும் ஆப்பிரிக்க மாணவர்கள் கூறியுள்ளனர்.

பல்கலைக் கழகத் துணைவேந்தர், தாம் இதுகண்டு ஆச்சரியப்பட்டதாகவும் இந்த ஆண்டு ஆரம்பத்தில், தாம் இந்த மாணவர்களை அழைத்து எச்சமயத்திலும் தமது உதவியும் அறிவுரையும் அவர்களுக்கு உண்டு என்று கூறியதாகவும், ஆனால், இதுவரை ஒரு முறை கூட ஆப்பிரிக்க மாணவர்கள் தம்மிடம் வந்து குறை எதும் கூறவில்லை என்றும் குறிப்பிட்டார்.

மாணவர்களிடையே சில பிரச்சினைகள் ஏற்படுவது சாதாரணம் என்றும் அந்த சாதாரணப் பிரச்சினைகளையே ஆப்பிரிக்க மாணவர்கள் மிகைப்படுத்தியுள்ளனர் என்றும் இதர மாணவர்கள் கருதுகின்றனர்.

அவருக்கு திருப்தி - அளிக்கவில்லை?

"காமன்வெல்த் பிரதமர்கள் மாநாட்டின் முடிவில் வெளியிடப் பெற்ற அறிக்கையில், அணு ஆயுதங்களின் ஆபத்துகள் பற்றிய தீர்மானம் கொஞ்சம் கூட திருப்தி அளிக்கக்கூடியதாக இல்லை; அணு ஆயுதங்களால் ஏற்படும் ஆபத்தை எல்லோருமே உணருகிறார்கள்; ஆனால் நல்ல வார்த்தைகளைச் சொல்லி பிரச்சினையைத் தீர்க்காமலேயே விட்டுவிடுகிறார்கள்,"

என்று, ஆச்சாரியார் அவர்கள் பேட்டியொன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

நிறவெறிக் கொடுமையின்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கறுப்பர்களை வெளியேற்றும் படலத்தின் முதற் கட்டம் முடிவடைந்ததும், டிரான்ஸ்வாலிலுள்ள ஆப்பிரிக்க தேசிய காங்கிரசின் செயலாளர் ராபர்ட்ரெஷாவும், மற்றும் 4 கறுப்பர் இளைஞர்களும் கைது செய்யப்பட்டனராம்.

நீர்வளிக் குண்டின் விளைவுகள்

ஆராய குழு நியமிக்குமாறு வேண்டப்படுகிறது

நீர்வளிக் குண்டின் விளைவுகள் பற்றி ஆராய்வதற்கு இந்தியா, ஆறு நிபுணர்கள்கொண்ட குழு ஒன்றை நியமிக்க வேண்டுமென்று, பிரிட்டனின் பிரபல தத்துவ விஞ்ஞானி ஒருவர் யோசனை கூறியிருக்கிறாராம். இக்குழு தருகின்ற கருத்துக்களை உலகிலுள்ள எல்லா சர்க்கார்களுக்கும் அனுப்ப வேண்டும் என்றும் அவர் கூறினாராம்.

"இனிமேல் உலகில் உள்ள எந்த ஒரு நாட்டின் நோக்கமும் யுத்தத்தின் மூலம் நிறைவேறிவிடாது என்பதை அக்குழுவின் யாதாஸ்து தெளிவாக்கிவிடும்; அப்படியே மற்றுமொரு யுத்தம் நேரிட்டால், லண்டனும், மற்றும் அமெரிக்க நகரங்களும் நிச்சயமாக அழிந்தே போகும்," என்றும் அவர் குறிப்பிட்டார்.

தாய்மொழி போதனு மொழியாகும்

பிரெஞ்சிந்திய அதிகாரமாற்ற ஒப்பந்தத்தின் கீழ் இந்திய—பிரெஞ்சு சர்க்கார் கூட்டாக அமைத்துள்ள கூட்டுக் கல்விக் குழு, புதுச்சேரி மாநிலத்தில் கல்வி முறையைச் சீர்திருத்தி அமைப்பது சம்பந்தமாக சில பூர்வாங்க முடிவுகளைச் செய்துள்ளது. புதுச்சேரி மாநில பள்ளிக்கூடங்களின் போதனு மொழியை பிரெஞ்சு மொழியிலிருந்து தாய் மொழியாக மாற்றுவதற்கான துரித ஏற்பாடுகள் மேற்கொள்ள வேண்டுமென அக்குழு தீர்மானித்துள்ளதாம்.

மேலும் இக்குழு, இதுபற்றிய சில கேள்விகளை, ஒரு தாளில் அச்சடித்து, அவற்றை மாணவர்களின் பெற்றோருக்கு அனுப்பி அவர்களிடமிருந்து கிடைக்கப்பெறும் அபிப்பிராயங்களைக் கண்டறிந்த பின்னரே இம்முடிவுகளும், மற்றைய மாறுதல்களும் மேற்கொள்ளப்படும் என்றும் கூறியிருக்கிறது.

'காட்சி' காணிர்!

மதுரை, பிப் 10—

இன்று மாலையில் நடைபெறுவதாக இருந்த மதுரை நகர சபைக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

கூட்டத்திற்கு, மதுரை நகர சபை காங்கிரஸ் உறுப்பினர்கள் 27 பேரில் ஒருவர் தவிர பாக்கி 26 பேரும் வராததே இதற்குக் காரணமாம். அந்த 26 பேரும் கூடி, நகரசபைத் தலைவரான ஏ. சிதம்பரம் அவர்கள் தமது பதவியை இராஜினமாச் செய்யும் வரை நகரசபை கூட்டத்திற்கு வருவதில்லை என்று முடிவு செய்துள்ளனராம்.

அறிவிக்கப்பட்டிருந்தபடி நடைபெறவிருந்த கூட்டத்தின்போது 7 உறுப்பினர்களும், நகர சபை காங்கிரஸ் கட்சித் தலைவரும் மட்டுமே வந்திருந்ததால் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

கழகக் கூட்டங்கள்

★

வண்டிப்பெரியார்

(திரு-கொச்சி) மஜீத் திடலில்

13—2—55 ஞாயிறு மாலை

பேசுவோர்:

எம். எஸ். இராமசாமி

கே. ஏ. கலையழகன்

★

வனவாசி

கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கு எதிரிலுள்ள மைதானத்தில்

14—2—55 மாலை 6 மணிக்கு

தலைவர்: க. வேங்கடாசலம்

பேசுவோர்:

ஈ. வெ. கி. சம்பத்

எஸ். அப்பாவு

டி. கே. குருநாதன்

★

சோளமாதேவி

(கவிநூந்கு சமீபம்)

14—2—55 திங்கள் மாலை

பேசுவோர்:

ஏ. வி. பி. ஆசைத்தம்பி

அலிசேக் மன்சூர்

பட்டுக்கோட்டை தி.மு.கழக உறுப்பினர்கட்கு

13—2—55 மாலை 5 மணிக்கு, கோட்டைகுளம் சந்திரசேகரன் கடையில், பட்டுக்கோட்டை தி.மு.கழகத்தின் 1955-56-க்கான புதிய நிர்வாகிகள் தேர்தல் கூட்டம் நடைபெறும்.

சொற் பயிற்சிக் கூட்டங்கள்

13—2—55 காலை 10 மணிக்கு: சென்னை 39-வது வட்ட தி. மு. கழகக் கட்டிடத்தில், தோழர் ம. செ. வெண்முகில் தலைமையில் 'உலகில் நாம்' என்னும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

13—2—55 காலை 9 மணிக்கு: சென்னை 44-வது வட்ட தி. மு. கழகப் பணிமனையில், தோழர் என். முத்துமாணிக்கம் தலைமையில் 'திராவிடமா? ஐக்கிய தமிழகமா?' என்னும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

13—2—55 காலை 9 மணிக்கு: சென்னை, முத்தியாலுப்பேட்டை: எண் 17, சாலைவினாயகர் கோயில் தெரு முத்தமிழ் மன்றத்தில், தோழர் கா. வி. இராதாகிருட்டிணன் தலைமையில் 'நேருவின் சோஷலிசம்' என்னும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

அழகிரி மன்றம், சென்னை 14-வது வட்டம்

13—2—55 காலை 10 மணிக்கு மேற்படி மன்றத்தில், 'மனிதன்' என்னும் பொருள் பற்றி தோழர் கா. அப்பாதுரை விரிவுரையாற்றுவார்.

தமிழ் மாணவர் கழகம் 10-ம் ஆண்டு தமிழ் வார விழா

14—2—55 மாலை 4 மணிக்கு பிரம்பை, இராவ்பகதூர் கலவல கண்ணன் உயர்நிலைப் பள்ளி தமிழ் மாணவர் கழகத்தின் பத்தாம் ஆண்டு தமிழ் வார விழா, மேற்படி பள்ளியில் திரு. வே. த. அர்ச்சுனனார் தலைமையில் நடைபெறும். திருவாளர்கள் வே. சண்முகசுந்தரனார், மா. இராசமாணிக்கம் ஆகியோர் பேசுவர்.

15—2—55 மாலை 4 மணிக்கு, மேற்படி விழாவின் 'பெண்கள் தினம்' நிகழ்ச்சி, திரு. பி ந. சண்முகன் தலைமையில் நடைபெறும். திரு. சவுந்திரபாண்டியன், திருமதி பூங்கோதை ஆகியோர் பேசுவர்.

'கலைக்கூடம்'

13—2—55 காலை 10 மணிக்கு, சென்னை, வண்ணையம்பதி, எண் 13, ஆண்டியப்ப முதலி தெரு, கே. ஆர். சி. பள்ளியில், தோழர் எம். முத்துகிருஷ்ணன் தலைமையில் 'கலைக்கூடம்' திறப்பு விழா நடைபெறும்.

பி. சோ. கட்சியின் இட்லர் ஆட்சி

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

புடைத்தார்கள்; பெண்களிடம் மிகவும் முரட்டுத்தனமாகப் போலீசார் நடந்துகொண்டனர்.

'ஏதுமறியாத மக்களின் வீடுகளில் போலீசார் நுழைந்து மக்களை வெளியே துரத்தினார்கள்;

"முதல் அமைச்சருக்கு மனைவியும், குழந்தைகளும், உள்ளமும் இருந்தால் அவர் எங்கள் மீது அனுதாபப்பட வேண்டும்;

'நாங்கள் நீதியைத் தேடி பெங்களூருக்குப் போக வேண்டியதாயிருக்கிறது; நீங்கள் (முதல் அமைச்சர்) நமது மாநிலத்தின் நீதி அமைப்பைப் பற்றி வெட்கப்படவில்லையா?"

என்று குஞ்சன் நாடார் கேட்டார்.

பட்டம் ஆட்சியில் நடைபெற்ற இதுபோன்ற கொடுமைகள் பலவற்றை அவர் குறிப்பிட்டுப் பேசி இறுதியில்,

"நான் ஏதாவது மோசமாகப் பேசியிருந்தால் என்னை மன்னித்துவிடுங்கள்; அவை, உடைந்துபோன உள்ளத்திலிருந்து வெளியானவை"

என்று கேட்டுக்கொண்டார்.

★

மந்திரி சபை ஏற்பாடு!

பதவியிலிருந்து விலகிய பட்டம் தாணு பிள்ளையின் தலைமையிலிருந்து பணியாற்ற இயலாது என பி. கேசவமேனன், வாயலா இடிகுலா என்ற இரண்டு பி. சோ கட்சி சட்டசபை உறுப்பினர்கள் பி. சோ. கட்சியிலிருந்து இராஜினமா செய்துவிட்டனர்.

கேசவமேனன் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து விட்டதாக அறிவித்திருக்கிறார்; காங்கிரஸ் மந்திரி சபை அமைத்தால் அதை ஆதரிப்பதாக இடிகுலா கூறியுள்ளார்.

பட்டம் தாணு பிள்ளையின் ஆதிக்கம் குறைந்து வரும்பொழுது சட்டசபையைக் கலைக்க வேண்டுமென்று அவர் கோரியதை திரு—கொச்சி ராஜப் பிரமுகர் ஏற்கவில்லை என்பது நிச்சயமாகி விட்டது.

முன்னர் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தபடி பனம்பள்ளி கோவிந்தமேனன் இராஜப் பிரமுகரைச் சந்தித்திருக்கிறார்.

தன்னை மந்திரி சபை அமைக்க முடியுமா என்று இராஜப் பிரமுகர் கேட்டதாகவும், 'முயற்சி செய்கிறேன்,' என்று தான் பதில் அளித்ததாகவும் கோவிந்தமேனன் நிருபர்களிடையே கூறினர். மீண்டும் அவர் 14-ந் தேதியன்று இராஜப் பிரமுகரைச் சந்திக்க இருக்கிறார், சனிக்கிழமையன்று நடைபெறும் திரு—கொச்சி காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்கள், பிரதேச காங்கிரஸ் உறுப்பினர்கள், மாவட்ட காங்கிரஸ் தலைவர்கள் ஆகியோர் அடங்கிய கூட்டத்தில் மந்திரி சபை அமைப்பது பற்றி ஆலோசிக்கப்படும் என்று தெரிகிறது.

திரு-தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் ஆதரவுடன் திரு—கொச்சியில், காங்கிரஸ் மந்திரி சபை அமைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

118 பேர் கொண்ட திரு—கொச்சி சட்டசபையில், இப்போதைய நிலைமையில் காங்கிரஸ் மந்திரி சபைக்கு 60 பேர் ஆதரவு இருக்குமென்று நம்பப்படுகிறது.

காங்கிரஸ் மந்திரி சபை அமைக்குமென்ற நம்பிக்கை பற்றிப் பேசுகையில், திரு—கொச்சி சட்டசபை ஐக்கிய முன்னணியின் தலைவர் டி. வி. தாமஸ், "காங்கிரசை பதவிக்கு அமர்த்துவது அரசியல் சட்டப்படியும், ஒழுக்கமுறைகளின் படியும் தவருனதாகும்," என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இதுபற்றி பதவி இழந்த தாணு பிள்ளையைக் கேட்டபோது, "உண்மையான ஜனநாயகம் வெற்றி பெற வேண்டுமென்றால் சட்டசபையைக் கலைப்பதுதான் பெருந்தன்மையான வழி" என்று குறிப்பிட்டார்.

போலீசாரைத் தாக்குவது, தீ மூட்டல், கலவரம், கொலை முயற்சி போன்ற குற்றங்கள் திரு—கொ. தி.த.நா.கா. உறுப்பினர்கள்மீது சாட்டப்பட்டுள்ளன வென்றும், இப்போது அவர்கள் உதவியுடன் காங்கிரஸ், மந்திரி சபை அமைக்குமென்பது, குற்றவாளிகளின் உத்தரவின் பேரில் வழக்குகள் வாபஸ் வாங்கப்படலாம் என்பதையே காட்டுகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

சென்னை மாவட்ட

தி. மு. கழக செயற் குழு உறுப்பினர்கட்கு

"16-2-55 மாலை 5 மணிக்கு, சென்னை, இராயபுரம், 'அறிவகத்'தில், சென்னை மாவட்ட தி. மு. கழக கமிட்டிக் கூட்டம் நடைபெற இருப்பதால் கமிட்டி உறுப்பினர்கள் அனைவரும் இதையே அழைப்பாகக் கொண்டு தவருது வருகைதர வேண்டுகின்றேன்,"

என, சென்னை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் கே. எம். கண்ணபிரான் அறிவிக்கிருர்.

தமிழ் எழுத்தாளர் மாநாடு

மூன்ருவது தமிழ் எழுத்தாளர் மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள், 13—2—55 அன்று சென்னை மகாஜன சபா மண்டபத்தில் நடைபெறும் அன்று காலை திரு. தெ. பொ. மீனட்சிசுந்தரனர் தலைமையில் கூடும் பட்டி மண்டபத்தில் 'தமிழை அரசாங்க மொழியாக்குவதற்கு ஒரு திட்டம்' என்பது பற்றி திரு. எ. ஜி. வெங்கடாச்சாரியார் ஓர் விவாதத்தை ஆரம்பித்து வைப்பார். விவாதத்தில் பல பிரகர்கள் கலந்துகொள்வர்.

அன்று மாலை, திரு. ம. பொ. சிவஞானம் தலைமையில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில் காலஞ்சென்ற கல்கியின் படத்தை திரு. சி. ஆர் சீனிவாசன் திறந்து வைப்பார்.

பார்மோசா: ஐ. நா. விவாதம்

பார்மோசாவின் நிலைமை பற்றி விவாதிக்க, ஐ. நா. சபையின் பாதுகாப்புச் சபை, வருகின்ற திங்கட்கிழமையன்று கூடும் என்று அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பார்மோசா பிரதேசத்தில் போர் நிறுத்தம் பற்றி ஐ. நா. சபை தயாரித்த திட்டம் ஒன்றுக்குச் சீனவிடமிருந்து புதிய பதில் ஒன்று வந்துள்ளதென்றும், இப்போது அந்தப் பதில் வாஷிங்டனில் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறதென்றும் கூறப்படுகிறது.

★

திரு— தமிழர் தலைவர்கள்

காமராசரை சந்தித்தனர்

மதுரை, பிப். 11—

திருவாங்கூர் தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர்களான ஏ. நேசமணி, ரசாக் ஆகியோர் சென்னை முதலமைச்சர் காமராசரை சந்தித்து திரு—கொச்சி அரசியல் நிலை பற்றி விவாதித்தனர் என்று தெரிகிறது

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி என் அண்ணுதுரை, எம்.ஏ.